CASE NO : ESIOP 6/2025

NAME : PW1 – சதீஸ்குமார்

DATE : 16.03.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் மனுதாரர் நிறுவனத்தில் General Manager ஆக பணியாற்றி வருகிறேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அங்கீகார கடிதம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழக்கே நான் தான் தாக்கல் செய்துள்ளேன். Ex P3 ஆவணம் 45 A உத்தரவு 04.05.2023 தேதியிட்டதை பெற்றுள்ளோம் என்றால் சரிதான். Ex P4 ஆவணம் prohibitory order 01.08.2024 தேதியிட்டதையும் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். Ex P4 ஆவணம் பெற்ற பிறகு தான் நீதிமன்றத்தில இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 45A உத்தரவிற்கு பின்புProhibitory order முன்பும் 45A உத்தரவு குறித்து ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்தீர்களா என்றால் இல்லை. பங்களிப்பு தொகை தவிர 45A உத்தரவில் தெரிவித்துள்ள அனைத்து விவரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. 45A உத்தரவில் உள்ள பங்களிப்பு தொகை குறித்த விவரங்களை தவிர மற்ற விவரங்களை மனுதாரர் ஏற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. 45A உத்தரவு முன்னர் 9 முறை நேர்முக விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். அதில் 5 முறை மனுதாரர் கலந்து கொண்டார்கள் என்றும், அதில் 3 முறை கால அவகாசம் கோரினோம் என்றும்

2 முறை சில ஆவணங்கள் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். T.R. கார்த்திக், செயலாளர் 07.02.2023 ல் நேர்முக விசாரணையில் கலந்து கொண்டார் என்றும் அதில் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் 45A உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆதலால் 45A உத்தரவு மனுதாரர் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் மற்ற விவரங்கள் அடிப்படையிலும் தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் அதில் கேட்கப்பட்ட தொகையினை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், அதனால் மனுதாரர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.